DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 74/2015**

| | |
|---|---|
| Deposition of Witness for | : DW 1 |
| Name | : தங்கபுஷ்பம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 09.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 9th June 2026

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், 2ம் பிரதிவாதிக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 21.02.1947 தேதியிட்ட 1ம் தபசில் சொத்து உள்ளிட்ட வேறு சொத்துக்களில் கிருஷ்ணநாடார் குமாரத்தி குத்தாலம்மாள் என்பவர் அவருக்குரிய 3ல் 1 எங்கு சொத்தினை அவரது சிறிய தகப்பனார்களான மாடநாடார் மற்றும் ராமசாமிநாடார் ஆகியோர்களுக்கு விடுதலை செய்து கொடுத்ததற்கான பதிவு விடுதலை ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** 25.09.2007 தேதியிட்ட எதிர்உரை 2ம் தபசில் சொத்தினை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கொடுத்துள்ள ஏற்பாடு ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** 14.03.2011 தேதியிட்ட 1ம் தபசில் சொத்து உள்ளிட்ட வேறு சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதியின் சகோதரிகளான ஜேம்ஸ் கமலா மற்றும் பிரான்சிஸ் ஜோஸ்மேரி ஆகியோர்கள் அவர்களுக்குரிய பங்குரிமை சொத்தினை விடுதலை செய்து கொடுத்ததற்கான பதிவு விடுதலை ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது பி.வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** 21.09.2007 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் தபசில் சொத்தினை கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. கதவு எண்.8/83 மற்றும் கதவு எண்.8/84 கொண்ட வீடுகளுக்கான வீட்டு வரி ரசீதுகள் 5 எண்ணம் தாக்கல் செய்கிறேன் **அது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன் **அது பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை தள்ளுபடி செய்திடப் பிரார்த்திக்கிறேன்.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**